Arimaa Nokku Journal ISSN: 2320-4842
(UGC Care Group-I Journal) Vol-18 No. 04 October–December 2024

# திருமூலர் திருமந்திரத்தில் பல்சமயக் கொள்கைகள்

**முனைவர் பீ. மெர்சி குளோரி,**
**உதவிப் பேராசிரியர்,**
**தனலெட்சுமி சீனிவாசன் மகளிர்**
**கலை மற்றும் அறிவியல் கல்லூரி,**
**பெரம்பலூர்.**

## முன்னுரை

'ஒன்றே குலம் ஒருவனே தேவன்' என்று பல நூற்றாண்டுகளுக்கு முன்பே சமுதாயத்திற்கு வேண்டிய நல்லிணக்க செய்திகளை திருமந்திரத்தில் அழகாக விளக்கியவர் திருமூலர். ஆன்மீகம், மருத்துவம், விஞ்ஞானம், தத்துவம், உளவியல் என திருமூலர் தொடாத துறைகளே இல்லை. இந்நூல் சைவ சமயத்திற்கு மட்டும் உரிய ஒரு சமய நூலாக அமையாது, உலக மக்களுக்கெல்லாம் அறத்தை போதிக்கும் நூலாகக் கருதப்படுகிறது. அதே போல் எபிரெயத்தில் இருந்து தமிழில் மொழிபெயர்க்கப்பட்ட பைபிள் கிறிஸ்துவ மதத்தின் புனித நூலாகக் கருதப்படுகிறது. பைபிள் மற்றும் திருக்குரான் 'ஒரே கடவுள்' என்ற கொள்கையை வலியுறுத்துகிறது. சமய நூல்கள் ஒவ்வொன்றும் கடவுள் கொள்கைகள் மட்டுமல்லாமல் சமுதாய விழுமியத்தையும், தனி மனித ஒழுக்கத்தையும், அறக்கருத்துக்களையும் போதிக்கின்றது. கிறிஸ்துவம், இஸ்லாம் பௌத்தம், சமணம் போன்ற சமயங்கள் ஒரே மாதிரியான அறக்கருத்துகளைப் போதிக்கின்றன என்பதை ஒப்பிட்டு நோக்குவதே இவ்வாய்வின் நோக்கமாகும்.

## அன்புடைமை

அன்பு என்பது மனநிலை சார்ந்த பல்வேறு வகையான உணர்வுகளை குறிக்கிறது. பண்டைய கிரேக்க தத்துவவாதிகள் நான்கு விதமான அன்பை அடையாளம் கண்டனர். அவை குடும்ப உறவு, நட்பு, காதல், தெய்வீக அன்பு ஆகியவையாகும். மனித நேயம், இரக்கம், பாசம் ஆகியவற்றைக் குறிக்கும் ஒரு நல்லொழுக்கமே அன்பு எனப்படுகிறது. அன்பு என்பது மனிதனின் அடிப்படைத் தேவைகளுள் ஒன்று. தான் அன்பு செய்யப்பட வேண்டும் என்பது ஒவ்வொரு மனிதனின் விருப்பமாகும். அன்பு என்ற ஒரு அறம் ஒருவரிடத்தில் இல்லையென்றால் வாழ்வதில் அர்த்தமில்லை என்பதை திருவள்ளுவர்

**"அன்பகத்தில்லை உயிர் வாழ்க்கை அன்பாற்கண்**
**வற்றல் மரந்தளிர்த் தன்று" (** திருக்குறள் .78)

என்ற குறள் வழி எடுத்துரைக்கிறார். அன்பே கடவுள் என்பதை திருமூலர்

**"அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவலார்**
**அன்பே சிவமாவதியாரு மறிகிலார்**
**அன்பே சிவமாவ தாரு மறிந்த பின்**
**அன்பே சிவமா யமர்ந் தாரே" (**திருமந்திரம். பாடல் 257)

என்று திருமந்திரத்தில் விளக்கியுள்ளார். மேலும் அன்பினால் மனதுருகி வேண்டுவோர்க்கு அடையத் தகுந்தவன் இறைவன் என்பதை,

**"அன்போடுருகி அகங்குழை வார்க்கன்றி**
**என்போல் மணியினை எய்தவொண் ணாதே" (**திருமந்திரம். பாடல் 147)

என்று திருமூலர் பாடியுள்ளார். அன்பைப் பற்றி விவிலியம் கூறுவதாவது,

**"எல்லாவற்றிற்கும் மேலாக ஒருவரிலாருவர் ஊக்கமான அன்புள்ளவர்களாயிருங்கள். அன்பு திரளான பாவங்களை மூடும்."**
**(**பைபிள் 1 பேதுரு 4:8.)

**"உன்னிடத்தில் நீ அன்புகூருவது போலப் பிறனிடத்திலும் அன்பு கூருவாயாக என்கிற இந்த வார்த்தையிலே நியாயப்பிரமாணம் முழுவதும் நிறைவேறும்"**
(பைபிள் கலாத்தியர் 5:14)

**"அன்பு நீடிய சாந்தமும், தயவுமுள்ளது. அன்புக்கு பொறாமையில்லை. அன்பு தன்னைப் புகழாது. இறுமாப்பாயிராது". (**பைபிள் 1 கொரிந்தியர் 13: 4)

என்று பலவாறு அன்பினால் உண்டாகும் சிறப்புகளை விவிலியம் எடுத்துக்கூறுகிறது.

நம்மை அன்பு செய்கிறவர்களை மட்டும் நாம் அன்பு செய்தால் எந்த பயனும் இல்லை. பகைவரிடம் எந்த பிரதிபயனும் எதிர்பாராமல் அன்பு செய்ய வேண்டும். பகைவர்களை அன்பு செய்வதின் காரணமாக பகைமை நீங்கி விடும் என்பது பௌத்தக் கொள்கையாகும். இது பற்றி,

**"எந்த காலத்திலும் பகைமை என்பது பகைமையினால் நீங்கி விடுவதில்லை. அன்பு ஒன்றினாலேயே பகைமை நீங்கும். இது தான் உலகப் பழைய நியதி**"

( சித்தார்த்த கௌதம புத்தர் பொன்மொழிகள் பக்.7)

ஏன்று புத்தபிரான் கூறுகிறார்.

மனித இனம் அன்பு செய்யப்படவில்லை என்றால் உலகம் நிலைபெற்றிருக்காது. இதனை,

**" அணுக்களிடையே இணைக்கும் சக்தி இருப்பதினாலேயே உலகம் பொடியாக உதிர்ந்து விடாமல் இருப்பதாக விஞ்ஞானிகள் கூறுகிறார்கள். அது போலவே உயிருள்ளவையினிடையிலும் அன்பு இணைக்கும் சக்தி இருக்க வேண்டும்."**

( மகாத்மா காந்தி பொன்மொழிகள் பக். 72)

என்று மகாத்மா காந்தி கூறுகிளார்.

## அவா அறுத்தல்

இன்றைய காலகட்டங்களில் மனிதன் பொருளுக்கு மட்டுமே முக்கியத்துவம் கொடுத்து அதைத் தேடி ஓடிக் கொண்டிருக்கிறான். ஆசை என்பது எல்லா மனிதர்களுக்கும் இருக்கக்கூடிய உணர்வுதான். அளவில்லாத ஆசை, நமது குணங்களை எல்லாம் அழித்துவிடும.; ".எந்த பொருளின் மீது ஆசை இல்லையோ அவற்றினால் துன்பம் இல்லை " என்று ஔவையார் கூறுகிறார்.

தீமை விளைவிக்கும் ஆசைகளை வேண்டாம் என்று புறக்கணிப்பதைப் போன்ற செல்வம், வேறில்லை என்பதை,

**"வேண்டாமை அன்ன விழுச்செல்வம் ஈண்டில்லை**
**ஆண்டும் அஃதொப்பது இல்" (**திருக்குறள் 363)

என்று வள்ளுவர் விளக்குகிறார். திருமூலர் திருமந்திரத்தில் 'அவா அறுத்தல்' பகுதி மனிதன் ஆசையை ஒழிக்க வேண்டும் என்பதை வலியுறுத்துகிறது.

**"ஆசையறுமின்கள் ஆசையறுமின்கள்**
**ஈசனோடாயினும் ஆசையறுமின்கள்**
**ஆசைப் படப்பட ஆய்வரும் துன்பங்கள்**
**ஆசை விடவிட ஆனந்தமாமே" (**திருமந்திரம் . பாடல் 2570 )

என்ற திருமந்திரத்தில், ஆண்டவனோடாக இருந்தாலும் அதிக ஆசை கூடாது. ஆசைப்பட்டால் பெருந்துன்பம் உண்டாகும். ஆசையை விட்டால் இன்பம் உண்டாகும் என்று கூறப்பட்டுள்ளது.

" **ஆசையானது அலைந்து தேடுகிறதைப் பார்க்கிலும் கண் கண்டதே நலம். இதுவும் மாயையே" (**பைபிள் பிரசங்கி 6:9)

"**நீங்கள் பண ஆசையில்லாதவர்களாய் நடந்து உங்களுக்கு இருக்கிறவைகள் போதுமென்று எண்ணுங்கள்" (**பைபிள் எபிரெயர் 13:5)

**"பண ஆசை எல்லாத் தீமைக்கும் வேராயிருக்கிறது" (** பைபிள் 1 தீமோத்தேயு 6:10)

என்ற பைபிள் வசனங்களின் மூலம் ஆசை என்பது ஒரு மாயை. அது தீமையை மட்டுமே கொடுக்கும். போதும் என்ற மனதுடன் வாழ்பவனே உலகில் மனமகிழ்வுடன் வாழமுடியும் என்பதை அறிந்து கொள்ளமுடிகிறது.

**"ஆசையே துன்பத்திற்கு காரணம்**
**கோபமே அழிவுக்கு காரணம்**
**கவலையே நோய்க்கு காரணம்**
**பயமே மன அழுத்தத்திற்கு காரணம்**"

என்பது புத்தரின் பொன்மொழிகள் ஆகும். வாழ்க்கையைப் புரிந்து கொள்வதில் அக்கரையின்றி அனுபவங்களில் நாட்டம் கொண்டு அனுபவங்களைத் தேடி ஓடுபவன் ஞானமில்லாத சாதாரண மனிதன் அந்த நாட்டமே ஆசையாகவும் சில தவறான

ஆசைகளாய் பேராசையாகவும் வளர்ந்து அவனை துன்பத்தில் வீழ்த்துகிறது. அதையே புத்தபிரான் எடுத்துரைக்கிறார்.

**ஈகை**

ஈகை என்னும் உயர் பண்பு தனிமனிதப் பண்பாகும். மனிதனாய்ப் பிறந்துவிட்ட பிறகு, தான் மட்டுமே வாழ்ந்து விட்டுச் செல்லாமல், மற்றவர் வாழ்க்கைக்காகவும் சிறிதளவு சிந்திக்க வேண்டும். எந்தவித எதிர்ப்பார்ப்பும் இல்லாமல் ஒருவருக்கு கொடுக்க வேண்டும் என்பதை,

**"வறியார்க்கு ஒன்று ஈவத இகை மற்று எல்லாம்**
**குறியெதிர்ப்பை நீரது உடைத்து"** (திருக்குறள் 221)

என்று வள்ளுவர் குறிப்பிடுகிறார். திருமூலர் திருமந்திரம்,

**"படமாடும் கோயில் பகவற்கொன்றீயின்**
**நடமாடும் கோயில் நம்பற்கங்காகா**
**நடமாடும் கோயில் நம்பர்க்கொன்றீயில்**
**படமாடக் கோயில் பகவற்க தாமே"** (திருமந்திரம். பாடல் 1857)

என்ற பாடல் வழி நாம் உலகத்தில் நடமாடிக் கொண்டிருக்கும் மனிதர்களுக்கு செய்யும் உதவி கடவுளையே சென்றடையும் என்ற கருத்தை வலியுறுத்துகிறது. மேலும்,

**"யாவர்க்கு மாம், இறைவற்கு ஒரு பச்சிலை**
**யாவர்க்கு மாம் பசுவுக்கு ஒருவாய் உறை**
**யாவர்க்கு மாம் உண்ணும் போது ஒரு கைப்பிடி**
**யாவர்க்கு மாம் பிறர்க்கு இன்னுரைதானே"** (திருமந்திரம் . பாடல் 109 )

என்ற பாடல் ஈகையறம் ஒன்று மட்டுமே மனிதத்தை, இரக்கத்தை, மனிதப் பண்பை அடையாளம் காட்டும் என்பதைக் கூறுகிறது. இதே கருத்தை.

**" நீயோ தர்மஞ் செய்யும் போது , உன் தர்மம் அந்தரங்மாயிருப்பதற்கு, உன் வலதுகை செய்கிறதை உன் இடதுகை அறியாதிருக்கக்கடவது. அப்பொழுது அந்தரங்கத்தில் பார்க்கிற உன் பிதா தாமே உனக்கு வெளியரங்கமாய்ப் பலனளிப்பார்".** (பைபிள் மத்தேயு 6: 3,4)

என்ற வசனத்தின் மூலம் நீ மற்றவர்களுக்கு உதவி செய்யும் போது கடவுள் உனக்கு உதவுவார் என்று பைபிள் விளக்கமளிக்கிறது. இதே கருத்தை.

**"இறைவனுடைய வழியில் தங்கள் பொருள்களைச் செலவு செய்பவர்களுக்குரிய நன்மைகளை இறைவன் பன்மடங்காக்குகிறான். அவன் அதிகமதிகம் வழங்குபவனும் யாவற்றையும் நன்கு அறிந்தவனும் ஆவான்"** (குர்ஆன் 2:261)

இஸ்லாமிய வாழ்வியல் இல்லை என்று வருபவர்க்கு இல்லை என்று சொல்லாமல் வாரி வழங்குபவராக வள்ளல் நபிகள் நாயகம் வாழ்ந்தார். இஸ்லாமியர்கள் ஈகைத்திருநாள் என்ற ஒரு பண்டிகையை கொண்டாடி வருகின்றனர். அப்பண்டிகையில் வறுமையில் வாடும் மக்களுக்கு தங்களால் இயன்ற உதவியைச் செய்வார்கள்.

## நிலையாமை

இன்றையச் சூழலில் ஒரு மனிதனுக்கு மற்றொரு மனிதன் மீது ஏற்படும் வெறுப்பிற்கும், பகையுணர்விற்கும் வாழ்வின் நிலையாமையை உணராமல் வாழ்வதே அடிப்படைக் காரணமாக அமைந்துள்ளது. இளமை, செல்வம், உடல், உயிர் போன்ற எதுவம் நிலையானவை அல்ல என்பதை ஒவ்வொரு மனிதனும் உணர வேண்டும். இந்நிலையாமையை குறித்து திருவள்ளுவர்,

**"நில்லாத அவற்றை நிலையின என்று உணரும்**
**புல்லறிவு ஆண்மை கடை"** (திருக்குறள் 331 )

என்று கூறுகிறார். நிலையில்லாத செல்வம் உள்ளபோதே நிலையான அறத்தைச் செய்து ஞானமாகிய செல்வத்தைப் பெற்றுவிட வேண்டும். அவ்வாறு பெறாவிடில் ஈட்டிய செல்வத்தைப் பிறர் கொண்டு செல்வர்.

தேனீக்கள் பல மலர்களிலிருந்தும், நெடுநாள் சேகரித்து வைத்திருந்த தேனை ஒரு நாள் மனிதர் எடுத்துக் கொண்டு சென்று விடுவார். அதுபோல மற்றவருக்குக்

கொடுக்காமல் தான் மட்டும் அனுபவிக்க சேர்த்து வைக்கும் செல்வம் எப்போதானாலும் அழிந்து விடும் . இதை,

"**ஈட்டிய தேன் பூ மணம் கண் இரதமும்**
**கூட்டிக் கொணர்ந்து ஒரு கொம்பு இடை வைத்திடும்**
**ஓட்டித் துரந்திட்டது வலியார் கொளக்**
**காட்டிக் கொடுத்தது கைவிட்டவாறே**" **(**திருமந்திரம் பாடல் 215)

என்ற பாடல் வழி திருமூலர் குறிப்பிடுகிறார். மேலும் நிலையாமையைக் குறித்து

**" மகிழ்கின்ற செல்வமும் மாடும் உடனே**
**கவிழ்கின்ற நீர்மிசைச் செல்லும் கலம்போல்**
**அவிழ்கின்ற ஆக்கைக்கோர் வீடுபேறாகச்**
**சிமிழொன்று வைத்தமை சேர்ந்தறி யாரே**" **(**திருமந்திரம் 217)

என்ற பாடல் வழி, செல்வத்தால் தேடும் பல பொருள்களும், நீரில் செல்லும் படகு எந்த நேரத்தில் கவிழும் என்று எதிர்பாராத வகையில் திடீரென்று கவிழ்ந்து விடும். அதுபோல நமது உடலும், உயிரும் எந்த நேரத்தில் நம்மை விட்டு பிரியும் என்பதை அறிய இயலாது என்று விளக்கமளிக்கிறார். இந்த வகையில் நிலையாமை குறித்து பைபிள் கூறும் கருத்துக்களை கீழே நோக்கலாம்.

**"பூமியிலே உங்களுக்குப் பொக்கிஷங்களைச் சேர்த்து வைக்க வேண்டாம். இங்கே பூச்சியும் துருவும் அவைகளைக் கெடுக்கும். இங்கே திருடரும் கன்னமிட்டுத் திருடுகிறதும் இல்லை**" **(**பைபிள் மத்தேயு 6:19 **)**

**"ஆகாயத்துப் பட்சிகளைக் கவனித்துப் பாருங்கள். அவைகள் விதைக்கிறதுமில்லை. அறுக்கிறதுமில்லை. களஞ்சியங்களில் சேர்த்து வைக்கிறதுமில்லை. அவைகளையும் உங்கள் பரமபிதா பிழைப்பூட்டுகிறார். ஆவைகளைப் பார்க்கிலம் நீங்கள் விசேஷித்தவர்களல்லவா?"** (பைபிள் மத்தேயு 6: 26 )

என்ற பைபிள் வசனங்கள் நிலையாமையைக் குறித்துத் தெளிவாக விளக்கமளிக்கிறது.

இவ்வுலகில் வாழ்கின்ற ஒவ்வொருவரும் அடுத்த நொடி உயிரோடு இருப்போமா? என்று தெரியாது. எனவே நாம் நிலையற்ற பொருளை சேமித்து வைப்பதில் பலன் இல்லை. ஓர் உழவன் தாம் அறுவடை செய்த தானியத்தின் ஒரு பகுதியை வரும் ஆண்டிற்கு விதையாகச் சேமிப்பது போல், மக்கள் நாள் தோறும் அறச்செயல்களை செய்ய வேண்டும் என்று வளையாபதிக் காப்பியம் கூறுகிறது.

## பஞ்சமா பாதகங்கள்

ஒரு மனிதன் இவ்வுலகில் வாழும்போது தம்முடைய வாழ்க்கையில் கள், பொய், களவு, கொலை, காமம் போன்ற ஐந்து பாவங்களையும் விலக்க வேண்டும். இந்த ஐந்து பாவங்களும் தலையாய குற்றங்கள் அல்லது முதன்மையான பாவங்கள் என்று அறியப்படுகின்றன. மனிதன் தம் வாழ்வில் இத்தகைய பாவங்களை கைவிடாமல் இருந்தால் அவன் நரகத்தில் தள்ளப்படுவான். இதனை பௌத்த மதக் காப்பியமான மணிமேகலைக் காப்பியம்,

**முடீ பொருள் உணர்ந்தேர் முதுநீர் உலகில்**
**கடியப் பட்டண வைந்துள அவற்றில்**
**கள்ளும் பொய்யுங் களவுங் கொலையும்**
**தள்ளாதம் காமம் தம்பால்**
**ஆங்கது கடிந்தோர் அல்லவை கடிந்தோரென**
**நீங்கினனென்றே நிறைதவ மாக்கள்**
**தாங்கா நரகந் தன்னிடை யுழைப்போர்**" **(**மணிமேகலை 22: 169-176 )

என்ற பாடல் வழி எடுத்துரைக்கிறது. இப்பஞ்சமா பாதகங்களைக் குறித்து திருமூலர்,

**"கொலையே களவுகள் காமம் பொய்கூறல்**
**மலையான பாதகமாhம அவை நீக்கித்**
**தலையாம் சிவனடி சார்ந்தின்பம் சார்ந்தார்க்கு**
**இலையாம் இவைஞானானந்தத்து இருத்தலே**" **(**திருமந்திரம் 241)

என்ற பாடல் வழி கொலை, களவு, காமம், பொய்கூறல், ஆகிய ஐந்தும் மனிதன் செய்யத் தகாதவை. அவ்வாறு மீறி செய்பவர்கள் நரகத்தில் வீழ்ந்து மீளாத் துன்பத்தினை எய்துவர் என்பதை விளக்கமாக எடுத்துரைக்கிறார். இதே கருத்தை பைபிளில் கூறும் போது,

**“கொலை செய்யாதிருப்பாயாக, விபச்சாரம் செய்யாதிருப்பாயாக**
**களவு செய்யாதிருப்பாயாக, பிறனுக்கு விரோதமாய்ப் பொய்ச் சாட்சி சொல்லாதிருப்பாயாக பிறனுடைய மனைவியை இச்சியாதிருப்பாயாக**” (பைபிள் உபாகமம் 5: 17-20)

என்று பஞ்சமாபாதகங்களை எடுத்துரைக்கிறது. தெரியாமல் செய்துவிடும் பாவங்களுக்கு பரிகாரம் உண்டு. தெரிந்தே செய்யும் குற்றங்களுக்கு பரிகாரம் கிடையாது. இப்பாவங்களை செய்கிறவர்கள் நரகத்தில் தள்ளப்படுவர் என்னும் கொள்கையை கிறிஸ்துவமும் வலியுறுத்துகிறது.

## பிறன் மனை நோக்காமை

ஒருவனுக்கு ஒருத்தி என்னும் பண்பாடு, தமிழ்ப் பண்;பாட்டில் தலைச் சிறந்ததாகும். இக்கொள்கையை தமிழ்ப் பண்பாடாக மட்டுமன்றி உலகப் பண்பாடாகவும் கருதப்பட வேண்டும். கடவுள் இவ்வுலகத்தில் மனிதனைப் படைக்கும் காலத்தில் ஒரு ஆதாமுக்கு, ஒரு ஏவாளைத் தான் படைத்தார். ஆனால் மனிதன் தன் இச்சையால் பாவத்தை சம்பாதித்துக் கொள்கிறான்.

சங்க கால இலக்கியத்திலிருந்து புராணங்கள், காப்பியங்கள் போன்ற எல்லாவற்றிலும் பரத்தமை குறித்து கூறப்பட்டுள்ளது. சுலப்பதிகாரத்தில் கோவலனும் கண்ணகியும் வாழ்ந்த மகிழ்ச்சியான இல்லற வாழ்க்கைக்கு பேரிடையுறாக இருந்தது பரத்தையர் வாழ்க்கையேயாகும்.

மனிதன் தன்னுடைய வாழ்வில் தன் மனைவி இருக்க பிறர் மனைவியை இச்சையோடு அணுகுவது மிகவும் ஒழுக்கக்கேடான செயலாகும். பிறர் மனை நயவாமை குறித்து திருவள்ளுவர்,

**“பிறர் மனை நோக்கா பேராண்மை சான்றோர்க்**
**கறனொன்றோ ஆன்ற வொழுக்கு**” **(**திருக்குறள் 148)

என்ற குறளின் வழியாக எடுத்துரைக்கிறார். பிறருடைய மனைவியை அடைய விரும்பாத பெரிய ஆண் தகைமை என்பது சால்புடையோர்க்கு அறனும், நிரம்பிய ஒழுக்கமும் ஆகும் என்று திருவள்ளுவர் கூறுகிறார். இதே கருத்தை திருமூலர்,

**“ஆத்த மனையாள் அகத்தில் இருக்கவே**
**காத்த மனையாளைக் காமுறும் காளையர்**
**காய்ச்ச பலாவின் கனியுண்ண மாட்டாமல்**
**ஈச்சம் பழத்துக் கிடருற்ற வாறே**” **(**திருமந்திரம் . பாடல் 244 **)**

என்ற பாடல் வழி விளக்குகிறார். எப்படியெனில் கட்டிய மனைவி வீட்டில் இருக்க பிறனுடைய மனைவி மீது ஆசைப்படுகிறான். இது தன் வீட்டுத் தோட்டத்தில் உள்ள பலாப்பழத்தை விட்டுவிட்டு காட்டில் உள்ள ஈச்சம் பழத்தை சாப்பிட விரும்புவதற்கு சமமாகும். காட்டில் பழுத்திருக்கும் ஈச்சம் பழத்தை பறிக்கும் போது முட்கள் குத்தும். அதுபோல பிறனுடைய மனைவியை அடைய முற்பட்டால் பெருந்துன்பம் விடாது துரத்தும். என்று திருமூலர் விளக்கமளிக்கிறார். பிறன் மனை நோக்காமை பற்றி ஔவையார் கூறும் போது

**நண்டு, சிப்பி வேய்கதலி நாசமுறுங் காலத்தில்**
**பொண்ட கருவளிக்குங் கொள்கைபோல் ஒண்டொடீ**
**போதந் தனங்கல்வி பொன்றவருங் காலம் அயல்**
**மாதர்மேல் வைப்பார் மனம் (நல்வழி 36)**

நண்டு, முத்துச் சிப்பி, மூங்கில், வாழை போன்றவை அழியும் காலம் வந்தவுடன் கன்று ஈனும். குன்று வருவதை வைத்து இது அழியும் காலம் வந்துவிட்டது என்று அறியலாம். அது போல் ஒருவனுக்கு கல்வி, பதவி, பண்பு, பெயர், புகழ், செல்வம் ஆகியவை அழியும் வேளை வருவதை அவர் பிறர் மனையைப் பார்க்கத் தொடங்கியதில் இருந்து நாம் அறியலாம். இதே கருத்தை,

**“பிறனுடைய மனைவியை இச்சியாதிருப்பாயாக**” **(உபாகமம் 5:21)**

**பிறனுடைய மனைவியிடத்தில் பிரவேசிப்பவனும், அப்படியே அவளைத் தொடுகிற எவனும் ஆக்கினைக்குத் தப்பான்."** (பைபிள் நீதிமொழிகள் 6 : 29)
என்ற வசனங்களின் மூலம் பைபிள் எடுத்துரைக்கிறது. ஒருவன் தன் மனைவி இருக்கும் போது இரண்டாவது திருமணம் செய்தால் அவன் விபச்சாரம் செய்பவனுக்கு ஒப்பாவான். சிறிதளவேனும் ஆராயாமல் பிறர் மனைவியை விரும்பிச் செல்கின்றவர் எவ்வளவு பெருமை உடையரானாலும் பலன் இல்லை.

## முடிவுரை

உலக மதங்கள் அனைத்திலும் மனித நேயம், அன்பு, கருணை, வாழிவியல் நெறிகள் என சமுதாயத்திற்குத் தேவையான அனைத்தும் உள்ளடக்கியுள்ளது. திருமூலர், இயேசு கிறிஸ்து, புத்தபிரான், நபிகள் நாயகம், மகாத்மா காந்தி போன்றோர் தனி மனிதனையும் சமுதாயத்தையும் வளம் பெறச் செய்வதில் அக்கறை கொண்டவர்களாகவே கருதப்பட்டனர். திருமந்திரம் உளவியல், வாழ்வியல், ஊழியல், மருத்துவம், தத்துவம் போன்றவற்றைக் கற்றுத்தருகிறது. அதே போல் பைபிள் மற்றும் திருக்குரான் கடவுளை வணங்கவும், போற்றவும், துதிக்கவும் சொன்னாலும் போதனைகள், அறிவுரைகள், வாழ்க்கை நெறிமுறைகள் போன்ற சமுதாய வாழ்வியல் அறங்களையும் சேர்ந்தே போதிக்கிறது. அன்புடைமை, அவா அறுத்தல், நிலையாமை, ஈகை, பஞ்சமாபாதகங்கள், பிறர்மனை நோக்காமை போன்ற பல வாழ்வியல் விழுமியங்களை பல சமயக் கருத்துக்களைக் கொண்டு இக்கட்டுரையின் வழியாக ஒப்பிட்டுக் காணப்பட்டது.

## நெறிதுணை நூல்கள்

1. ப. அருணாச்சலம் - பக்தி இலக்கியம்,
2. பைபிள் , தி பைபிள் சொசைட்டி ஆஃப் இந்தியா,
3. இரா. மோகன் - திருக்குறள் பொக்கிஷம்
4. மானோஸ் - மகாத்மா காந்தி பொன்மொழிகள்,
5. எஸ். ரகுநாதன் - சித்தார்த்த கௌதம புத்தர் பொன்மொழிகள்
6. மொழிபெயர்ப்பாளர் எம். அப்துல் வஹ்ஹாப் - திருக்குர் ஆன்
7. சிலம்பொலி சு. செல்லப்பன் - மணிமேகலை